



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னைத் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள கபாலி திருமண மண்டபத்தில் நேற்று (9–6–2025) கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்பி., வேளச்சேரி பி.மணிமாறன், மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், மாவட்ட தகவல் தொடர்பு பொறுப்பாளர் ஓ.சுந்தரம், தொகுதி பொறுப்பாளர் சாய்ஸ்ரீகாந்த், பகுதி கழக செயலாளர்கள் துரை.கபிலன், சு.சேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர் மற்றும் எம்.விநாயகமூர்த்தி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கழக த.ரமேஷ், வேளச்சேரி வே.ஆனந்தம், எம்.ஜெகதீசன், சி.சுரேஷ், முகேஷ்கண்ணன் உள்ளிட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (09.06.2025) நேற்று மாலை 4.00 மணியளவில் காரம்பாக்கம் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள சென்னை லீ பேலஸ் ஹோட்டலில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமையிலும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சென்னை மண்டல பொறுப்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு கழக இளைஞர் அணி சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறது. அந்த வகையில் 08.06.2025 அன்று சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தியும், சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து கழக தகவல் தொடர்பு அணியின் துணைச் செயலாளர் அழகிரி சதாசிவும் பயிற்சி அளித்தனர். மாறி வரும் அரசியல் சூழலுக்கேற்ப சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் இந்நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டது. தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் – விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, பகுதிச் செயலாளர்கள் வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் ஜி வெங்கடேசன். மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன் மற்றும் கழக முன்னோடிகள், இளைஞர் அணியினர் பங்கேற்று இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## எஜமானர்களுக்கு சாமரம் வீச வீண் அவதூறு!

# தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!



சென்னை, ஜூன் 10-

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்துள்ள அறிக்கை வருமாறு:-

தாம்பரம் அரசு சேவை இல்லத்தில் காவலாளியால் மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தில் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான். மேற்கொண்டு விடுதியில் தங்கியிருந்த 100-க்கும் மேற்பட்ட மாணவிகளிடம் வேறு யாரும் பாதிக்கப்பட்டனரா என தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

முதல் கட்ட விசாரணையில் வேறு யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது. இனி அரசு சேவை இல்லங்களில் பெண் காவலாளிகளை நியமிக்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இக்கொடுமையை மிக துணிச்சலோடு எதிர்கொண்டு புகார் அளித்த மாணவிக்கு இந்த திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

திராவிட மாடல் ஆட்சியும், முதலமைச்சர் அவர்களும் பெண்களுக்கு அரணாக இருப்பதால் தான் இந்த மாதிரி குற்ற சம்பவங்களை எதிர்த்து தைரியமாக புகார் அளிக்க பெண்கள் முன்வருகின்றனர். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்ட பெண்களே தாக்குதல்களுக்குள்ளாகிய மோசமான சூழல் நிலவியதை தமிழ்நாட்டு பெண்கள் யாரும் இன்னும் மறக்கவில்லை. அப்படிப்பட்ட சூழலை எல்லாம் மாற்றி பெண்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் முன்னேற்றத்திற்கு துணை நிற்பதோடு பெண்கள் பாதுகாப்பிலும் துளியும் சமரசமற்று செயலாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு. பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு எதிரான தண்டனையை மிகக் கடுமையாக்கியதோடு குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, விரைவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உடனடியாக தண்டனையும் பெற்றுக்கொடுத்து வருகிறது திராவிடமாடல் அரசு. அரசின் இச்செயலையும் காவல்துறையின் செயல்பாட்டையும் உயர்நீதிமன்றமே பாராட்டியும் உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை அ.தி.மு.க. அரசு எப்படி கையாண்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

அ.தி.மு.க.வை சேர்ந்த குற்றவாளிகளைக் காப்பாற்ற புகார் அளித்த பெண்ணின் குடும்பத்தையே அ.தி.மு.க. குண்டர்களை விட்டுத் தாக்கிய கொடுமையும் அரங்கேறியது.

அப்படி *antiwomen admk government* ஐ நடத்திய பழனிசாமிக்கு, தற்போது குற்றங்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல் குற்றங்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பெண்களுக்கு ஆதரவாக இருந்துவரும் திராவிட மாடல் அரசைப்பற்றி பேச எந்த தார்மீக உரிமையும் கிடையாது.

இதோ இப்போது கூட அரசு விரைவாக அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்ட பின்னும் இதன் மூலம் எப்படியாவது டெல்லியின் எஜமானர்களுக்கு சாமரம் வீச, பாதிக்கப்பட்ட மாணவியின் பக்கம் நிற்காமல் அதை வைத்து அரசியல் செய்யத் தொடங்கி விட்டார் பழனிசாமி. தமிழ்நாடு *Out of Control* என முதல்வர் கூறியதை மடைமாற்றும் வேலையில் இறங்கி உள்ளார் அடிமை பழனிசாமி.

எப்போதெல்லாம் அமித் ஷாவிற்கும் , டெல்லிக்கும் ஆபத்து வருகிறதோ அப்போதெல்லாம் *Delhi Control*லில் இருக்கும் பழனிசாமி ஓடோடி வந்து வீண் அவதூறுகளை பரப்பி காப்பாற்றத் துடிக்கிறார். தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி, தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

